மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இந்தச் சுரங்கப் பாதையைத் திறக்க மத்திய அமைச்சரை அழைத்தது பற்றிய குறிப்பு எதுவும் இப்போது இல்லை.

திரு. என். கிட்டப்பா: இத்தகைய சுரங்கப்பாதைகள் சென்னை நகரில் தற்போது எந்தெந்த இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன? இனிமேல் எந்தெந்த இடங்களில் அமைப்பதற்கான ஆய்வை அரசு மேற்கொள்ள இருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: சென்னை நகரில் பதினொரு இடங்களில் சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. 1. கிண்டி அருகிலுள்ள ரயில்வே மேம்பால மேம்பாட்டு வேலைகள். 2. திருவொற்றியூர்-பொன்னேரி-பஞ்செட்டி சாலையில் உள்ள பாலத்தை புதுப்பித்தல். 3. அண்ணா சாலையில் ஆயிரம் விளக்குப் பகுதியில் ஒரு பாதசாரி சுரங்கப்பாதை அமைத்தல். 4. பூந்தமல்லி நெடுஞ்சாலையில் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரிக்கு அருகே ஒரு பாதசாரி சுரங்கப்பாதை அமைத்தல். 5 ஜி. என். டி. சாலையில் இரயில்வே அலுவலகம் அருகே ஒரு பாதசாரி சுரங்கப்பாதை அமைத்தல். 6. பூந்தமல்லி நெடுஞ்சாலையில் தாஸப்பிரகாஷ் அருகே பாதசாரிகளுக்கான ஒரு சுரங்கப்பாதை அமைத்தல், 7. ஜி. என். டி. சாலையில், வால்டாக்ஸ் திரையரங்கருகே ஒரு பாதசாரிகளுக்கான சுரங்கப்பாதை அமைத்தல் 8. சாந்தி திரையரங்கருகில் ஒரு பாதசாரிகளுக்கான சுரங்கப் பாதை அமைத்தல் 9. அண்ணா சாலையில் எல். ஐ. சி. நிறுவனத்திற்கருகே ஒரு பாதசாரிகளுக்கான சுரங்கப் பாதை அமைத்தல் 10. ஜி. என். டி. சாலையையும் திருவொற்றியூர்-பொன்னேரி-பஞ்செட்டி சாலையையும் இணைக்க இருக்கும் இணைப்பு சாலைக்காக நிலம் கையகப்படுத்துதல். 11. ஜி. எஸ். டி. சாலையையும், வேளச்சேரி சாலையையும் தேசிய நெடுஞ்சாலையுடன் கிழக்கில் இணைக்கும் ஒரு தனிப்பாதை அமைக்க நிலம் கையகப்படுத்துதல்.

கோமுகி ஆற்றின் குறுக்கே பாலம்.

[*829 வினா— திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள கண்டாச்சிமங்கலம், வரஞ்சரம் சாலையை இணைக்கும் வகையில் கோமுகி ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.

[1978 ஏப்ரல் 6

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : கண்டாச்சிமங்கலம் —வரஞ்சரம்சாலையை இணைக்கும் வகையில் கோமுகி ஆற்றின் குறுக்கேபாலம்ஒன்று கட்டவேண்டும் என்று நீண்டநாட்களாக ஒரு கோரிக்கையை எழுப்பிக்கொண்டிருக்கிறோம். அது பரிசீலனையில் இருப்பதாகக் கூறப்பட்டது. சட்டசபையில் இது பற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்தபோது ரூ. 5 லட்சத்துக்கு மதிப்பீடு செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனுல் தற்சமயம் இல்லை என்று இப்போது கூறுகிறார்கள். வரஞ்சரம் கிராமத்தில் அறுபது ஆண்டுகளுக்கு முன்பே ஒரு காவல் நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. அது மழைக்காலத்தில் தொடர்பற்றுப் போவதால் இந்தப் பாலத்தைக் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.50)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு பாலம் அமைக்கின்ற திட்டத்தை கைவிட்டுவிட்டதாக சொல்லவில்லை. ஒரு தாம்போகி ஒன்று ஐந்து லட்சம் ரூபாய் செலவில் கட்டவேண்டும் என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. ஆனுல் நிதிநிலை சரியாக இல்லாததால் இந்த ஆண்டு இந்த வேலை மேற்கொள்ளப்படவில்லை. வரும் ஆண்டில் இதை மேற் கொள்வதற்கு ஆராயப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, தென்னுற்காடு மாவட்டத்தையும் தஞ்சை மாவட்டத்தையும் இணைக்கும் வகையில் மணல்மேட்டிற்கும், முட்டம் கிராமத்திற்கும் இடையில் கொள்ளிடத்தில் ஒரு தரைப்பாலம் அமைக்கும் திட்டம் இந்த அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்கு தனிக் கேள்வி போடவும்.

திரு. வ. துலுக்காணம்: தலைவர் அவர்களே, கண்டச்சிமங்கலத்திலிருந்து வரஞ்சரம் சாலையில், பெருமைதரக்கூடிய விதத்தில், சத்தியவாணிமுத்து அவர்கள் ஆலயப்பிரவேசம் செய்த கோயில் இருக்கிறது, அறுபது ஆண்டுகளுக்கு முன்பே அமைக்கப்பட்ட போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. இந்த போலீஸ் ஸ்டேஷனிலிருந்து மறுபக்கம் போகவேண்டுமென்றால், ஆற்றைக்கடந்துதான் போக வேண்டியிருக்கிறது, ஆகவே இங்கே ஒரு பாலம் மிக அவசியமாக இருக்கிறது. மழை காலங்களில் இந்தப் பகுதியிலுள்ள மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள் ஆகவே இந்த அவசியங்களை எல்லாம் பார்த்து அரசு அவசரமாக இங்கே ஒரு பாலத்தைக் கட்டிக் கொடுக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை பரிசீலிக்கப்படும்.